IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, PUDUKKOTTAI
( CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)
S.C.No. 56 /2025
Dated:17.02.2026
Deposition of witness for :P.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. இளையராஜா | வயது | : | 27/2026 |
| தகப்பனார் பெயர் | : | அருணாச்சலம் | தாலுகா | : | குளத்தூர் |
| கிராமம் | : | தொட்டியவயல் | தொழில் | : | வெளிநாட்டில் வேலை |

Solemnly affirmed by Thiru. Srinivasan, Grade -I Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873

**Accused present. Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:-**

1) **நான் தற்போது** தொட்டிவயல் கிராமத்தில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு வெளிநாட்டில் வேலை செய்து வந்தேன்.

2) ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.

3) இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

4) என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதல் கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ-1** ஆகும்.

5) என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ-2** ஆகும். மேற்படி கையெழுத்துக்களை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 **Bharatiya Sakshya Adhiniyam'2023** சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 01.03.2024ம் தேதி மாலை 5.00 மணியளவில் வெள்ளனூர் காவல் நிலைய எல்கைக்குட்பட்ட புதுக்கோட்டை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், முத்துடையான்பட்டி

கடை வீதியில், அன்னவசால் பிரிவு ரோடு அருகே ஆஜர் எதிரி சட்ட விரோத நோக்கத்திற்கு பயன்படுத்தும் உட்கருத்துடன் உரிமம் இன்றி கையில் மனித உயிருக்கு பெரும் ஆபத்தை விளைவிக்ககூடிய கொடூர ஆயுதமான தடைசெய்யப்பட்ட இரும்பு பட்டா கத்தியை வைத்துக்கொண்டு, போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் அச்சத்தையும், இடையூறையும் ஏற்படுத்தும் வகையில், பொது அமைதிக்கு பெரிதும் பங்கம் ஏற்படுத்தும் வகையில் பொதுமக்களை பார்த்து என் மேல் உள்ள பயம் விட்டுபோச்சா என்றும், உங்களுக்கு இன்றைக்கு எவனையாவது கொன்னு பலி கொடுப்பதற்கு இங்கே வந்துருக்கிறேன் என்று சத்தம் போட்டு மிரட்டியதாகவும், அப்போது வெள்ளனூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் எதிரியை கைது செய்ததாகவும், அப்பொழுது எதிரி தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், எதிரி கையில் இருந்த இரும்பு பட்டா கத்தியை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அந்த இடத்தில் வைத்து நானும், அன்பு என்பவரும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையெழுத்து போட்டுவிட்டு, தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை**

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
புதுக்கோட்டை.

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, PUDUKKOTTAI
( CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)
S.C.No. 56 /2025
Dated:17.02.2026
Deposition of witness for :P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அன்பு | வயது | : | 29/2026 |
| தகப்பனார் பெயர் | : | முருகேசன் | தாலுகா | : | குளத்தூர் |
| கிராமம் | : | மேலமுத்துடையான்பட்டி | தொழில் | : | கறிக்கடை தொழில் |

Solemnly affirmed by Thiru. Srinivasan, Grade -I Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873

**Accused present. Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:-**

1) **நான் தற்போது மேலமுத்துடையான்பட்டி** கிராமத்தில் வசித்து கறிக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன்.

2) ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.

3) இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

4) என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ-3** ஆகும்.

5) என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ-4** ஆகும். மேற்படி கையெழுத்துக்களை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam'2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 01.03.2024ம் தேதி மாலை 5.00 மணியளவில் வெள்ளனூர் காவல் நிலைய எல்கைக்குட்பட்ட புதுக்கோட்டை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், முத்துடையான்பட்டி

கடை வீதியில், அன்னவசால் பிரிவு ரோடு அருகே ஆஜர் எதிரி சட்ட விரோத நோக்கத்திற்கு பயன்படுத்தும் உட்கருத்துடன் உரிமம் இன்றி கையில் மனித உயிருக்கு பெரும் ஆபத்தை விளைவிக்ககூடிய கொடூர ஆயுதமான தடைசெய்யப்பட்ட இரும்பு பட்டா கத்தியை வைத்துக்கொண்டு, போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் அச்சத்தையும், இடையூறையும் ஏற்படுத்தும் வகையில், பொது அமைதிக்கு பெரிதும் பங்கம் ஏற்படுத்தும் வகையில் பொதுமக்களை பார்த்து என் மேல் உள்ள பயம் விட்டுபோச்சா என்றும், உங்களுக்கு இன்றைக்கு எவனையாவது கொன்னு பலி கொடுப்பதற்கு இங்கே வந்துருக்கிறேன் என்று சத்தம் போட்டு மிரட்டியதாகவும், அப்போது வெள்ளனூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் எதிரியை கைது செய்ததாகவும், அப்பொழுது எதிரி தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், எதிரி கையில் இருந்த இரும்பு பட்டா கத்தியை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அந்த இடத்தில் வைத்து நானும், இளையராஜாவும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையெழுத்து போட்டுவிட்டு, தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை**

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
புதுக்கோட்டை.